சுருக்கம்

தொழில் – சர்க்கரைத் துறை – அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஈரடுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் நவீன சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.சி.1) துறை

அரசாணை (நிலை) எண். 98

நாள் : 31.07.2014
ஜய, ஆடி – 15,
திருவள்ளுவர் ஆண்டு 2045

ஆணை :

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சித் திட்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள் :

"அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு 90 லட்சம் லிட்டர் எத்தனாலையும், 1.65 கோடி லிட்டர் எரிசாராயத்தையும் உற்பத்தி செய்யும் திறனை இவ்வாலைகள் பெற்றுள்ளன. இவ்வாலைகளில் தண்ணீரை சேமிக்கும் நோக்கத்துடனும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றும் நோக்கத்துடனும் நவீன சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். இந்த சுத்திகரிக்கும் நிலையமானது, ஈரடுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் அமைக்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர், மறு சுழற்சி முறையில் மீண்டும் ஆலையில் பயன்படுத்தப்படுவதால் தண்ணீர் தேவை குறையும். ஆலை கழிவு நீர் வெளியேற்றம் முழுமையாக கட்டுப்படுத்தப்படும். இந்த நவீன சுத்திகரிப்பு நிலையம் ஒவ்வொன்றும் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 17 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்".

2) மேற்காணும் திட்டத்தினை ஆலைகளின் சொந்த நிதியிலிருந்தும், கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடனாகவும் பெற்று குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச.வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சர்க்கரைத் துறை இயக்குநர்,
690, அண்ணா சாலை, நந்தனம், சென்னை – 600 035.

நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை, சென்னை–9.
தொழில் (அநமு2.1/வசெதி1) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. கலைச்செல்வி
பிரிவு அலுவலர் 31/7/2014

31/7/2014